**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C 320 of 2013**

**Deposition of Witness P. W.7**

| | |
|---|---|
| **Name : சிவனந்தம்** | **Father/Husband's Name: ராக்குசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 11.05.2023.**

**Accused absent. petition u/s.317 Cr.P.C is filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது புங்கமுத்தூரில் குடியிருக்கிறேன். தோட்டத்து வேலை செய்கிறேன். 21.12.2012ம் தேதி இரவு 07.00 மணிக்கு நானும், என் நண்பர் சுப்பிரமணியனும் இருச்சக்கர வாகனத்தில் வந்து தொப்பம்பட்டி ராமகிருஷ்ணா பங்கில் பெட்ரோல் அடித்து கொண்டிருந்த போது அதே ரோட்டில் பழனியிலிருந்து வந்த டாடாசுமோ வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வேகமாக வந்த கார் வடக்கிலிருந்து தெற்கே வந்த சி.டி.100 இருச்சக்கர வாகனத்தில் வந்த இருவர் மீது மோதியதில் இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்த கணேசன் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். அவர் பின்னால் உட்கார்ந்து வந்த மகுடீஸ்வரனுக்கு வலது கால், வலது கையில் அடிப்பட்டிருந்தது. இதை பார்த்த நான் 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் அடிப்பட்டவரை அனுப்பி வைத்தோம். சம்பவயிடத்தில் இறந்து போன கணேசனை மற்றொரு வாகனம் வந்து எடுத்து சென்றது. டாடா சுமோவை ஓட்டி வந்தவர் அப்போது வண்டியில் இருந்தார். தற்போது பார்த்தால் ஞாபகம் இல்லை. விபத்திற்கு காரணம் டாடா சுமோவை வேகமாக ஓட்டி வந்தது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. இவ்விபத்து சம்பந்தமாக புகாரை மகுடீஸ்வரன் அப்பா தான் கொடுத்தார். விபத்து நடந்த இடத்திற்கும் நான் நின்றிருந்த இடத்திற்கும் இடையில் 200, 300 அடி தூரம் இருக்கும். டாடாசுமோ வாகனத்திற்குள் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சத்தம் கேட்டு தான் விபத்தை பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது நான் சத்தம் கேட்டு தான் பார்த்தேன். விபத்தில் இறந்து போன கணேசன் தான் இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். போலீசார் வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னுடன் போலீசார் வேறு யாரையும் விசாரிக்கவில்லை. விபத்தில் இறந்து போன மகுடீஸ்வரன் எனது ஊரைச்சேர்ந்தவர் என்பதால் போலீசார் என்னை அழைத்து விசாரித்து வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளார் என்றால் சரிதான்.

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.06.02 16:17:05 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C 320 of 2013**

**Deposition of Witness P. W.8**

**Name : வேலுச்சாமி** **Father/Husband's Name: சுப்பிரமணி**

**Village :** **Taluk :**

**Caste :** **Calling:**

**Religion:** **Age :**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 11.05.2023.**

**Accused absent. petition u/s.317 Cr.P.C is filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது புங்கமுத்தூரில் குடியிருக்கிறேன். விபத்தில் இறந்து போன கணேசன் தெரிந்தவர். காயம்பட்ட மகுடீஸ்வரன் எனது மகன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக 21ம் தேதி 12வது மாதம் மாலை 06.00 மணிக்கு தொப்பம்பட்டி பங்க் அருகில் தெற்கிலிருந்து வந்த கார் ஒன்று வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்ற இருச்சக்கர வாகனத்தில் சென்ற என் மகன் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அந்த இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய கணேசன் சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார். என் மகனுக்கு அடிப்பட்டு கால் ஒடிந்து விட்டது. அடிப்பட்டு இறந்தவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அடிப்பட்ட என் மகனை பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைப்பார்த்தார்கள். இதை கேள்விப்பட்ட நான் அடிப்பட்ட என் மகனை பழனி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். அப்போது அவருக்கு கால் ஒடிந்து இருந்தது. இந்த விபத்திற்கு காரணம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த கார் ஓட்டுனர் தான் காரணம் என்று சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. எனக்கு என் மகன் விபத்துக்குள்ளனதை யார் சொல்லி தெரிந்து கொண்டேன் என்றால் என் மருமகளுக்கு போன் மூலம் தகவல் சொன்னதாக என்னிடம்

சொன்னார்கள். அடிப்பட்ட எனது மகன் மகுடீஸ்வரனை நான் பழனி அரசுமருத்துவமனையில் போய் தான் பார்த்தேன் என்றால் சரிதான். விபத்துக்குள்ளான இருச்சக்கர வாகனத்தை விபத்தில் இறந்து போன கணேசன் தான் ஓட்டி சென்றாரா என்றால் அது பற்றி எனக்கு உறுதியாக தெரியாது. இருச்சக்கர வாகனத்தை யார் ஓட்டி சென்றார்கள் என்பது குறித்து நான் தெரிந்து கொள்ளவில்லை. விபத்து நடந்த சமயத்தில் நான் வீட்டில் இருந்ததால் விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்பது குறித்து நேரடியாக தெரியாது என்றால் எனக்கு மற்றவர்கள் சொல்லி தான் தெரியும். விபத்தில் இறந்து போன கணேசன் தான் இருச்சக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டிச்சென்று காரின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.06.02 15:52:08 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.